## நிலச்சீர்திருத்த இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சேப்பாக்கம், சென்னை—5
## முன்னிலை: திருமதி வ.கலைஅரசி, இ.ஆ.ப.

செயல்முறை எண்.அ1/ 1479 /2013 (நி.சீர்), நாள் 28.12.2018

**பொருள்:** பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி IV – நிலச்சீர்திருத்த இயக்குநர் அலுவலகம், சென்னை—5 – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் (2016–17) ஆண்டிற்கான தட்டச்சர் பணியிடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

படிக்க:

1. TNPSC, Letter No.5680/PSD-A2/2017, dated 25.9.2017
2. TNPSC, Letter Nc. 5680/PSD-A2/2017, dated 3.1.2018
3. நிலச்சீர்திருத்த இயக்குநரின் செயல்முறை ஆணை, அ1/1479/2013 (நி.சீர்), நாள் 17.10.2017 (ம) 6.2.2018.
4. திரு. அ. சேகர் என்பவரின் கடித நாள் 25.10.2017.
5. திரு. தே. கமலக்கண்ணன் என்பவரின் கடித நாள் 27.10.2017.
6. திருமதி. ர. லட்சுமி என்பவரின் கடித நாள் 9.2.2018.
7. திருமதி. ச.வி.பார்வதி என்பவரின் கடித நாள் 13.2.2018.
8. திருமதி. மு. வசந்தா என்பவரின் கடித நாள் 19.2.2018.

*ஆணை:*

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2016–2017 ஆம் ஆண்டு காலிப்பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு நிலச்சீர்திருத்த துறைக்கு பார்வை 1 மற்றும் 2—இல் காணும் கடிதத்தின்படி தட்டச்சராக ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3—இல் காணும் நிலச்சீர்திருத்த இயக்குநரின் செயல்முறைகளின்படி பணிநியமனம் செய்யப்பட்டு கீழ்கண்டவாறு 5 நபர்கள் பணியில் சேர்ந்துள்ளார்கள்.

| வ.எண் | பெயர் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | அ. சேகர் | 25.10.2017 |
| 2. | தே. கமலக்கண்ணன் | 27.10.2017 |
| 3. | ர.லட்சுமி | 9.2.2018 |
| 4. | ச.வி.பார்வதி | 13.2.2018 |
| 5. | மு. வசந்தா | 19.2.2018 |

இவர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தட்டச்சர் பணியமைப்பில் பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி தட்டச்சர்கள் பணியேற்ற நாள் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது, பணிவரன்முறையினைத் தொடர்ந்து பட்டியலில் கண்ட தட்டச்சர்கள் அவர்கள் பணியேற்ற நாள் முதல் தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது. இவர்களது தகுதிகாண் பருவம் பணியேற்ற நாள் முதல் மூன்று (3)

ஆண்டு காலத் தொடர்பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

தகுதிகாண் பருவக் காலத்தில் தனியர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுகள் / பயிற்சிகள் தேர்வு பெற வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

மேலும், இப்பணிவரன்முறையானது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகிய நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது.

மேற்படி, தேர்வுகளை தகுதிகாண் பருவம் துவக்கப்பட்ட நாள் முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறும்பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்புமின்றி தனியர் பணியிலிருந்து நீக்கப்படுவாரென்றும் ஆணையிடப்பப்படுகிறது.

இவர்களது பணிவரன்முறை செய்தது மற்றும் தகுதிகாண் பருவம் தொடங்கி ஆணையிடப்பட்டது போன்ற விவரங்கள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட உதவியாளர் தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– வ.கலைஅரசி
நிலச்சீர்திருத்த இயக்குநர்

பெறுநர்

1. திரு. அ. சேகர், தட்டச்சர்,
நிலச்சீர்திருத்த இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை–600 005.

2. திரு. தே. கமலக்கண்ணன், தட்டச்சர்,
நிலச்சீர்திருத்த இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை–600 005.

3. திருமதி ர. லட்சுமி, தட்டச்சர்,
நிலச்சீர்திருத்த இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை–600 005.

4. திருமதி ச.வி.பார்வதி, தட்டச்சர்,
நிலச்சீர்திருத்த இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை–600 005.

5. திருமதி மு. வசந்தா, தட்டச்சர்,
நிலச்சீர்திருத்த இயக்குநர் அலுவலகம்,
சேப்பாக்கம், சென்னை–600 005.

நகல்:

1. சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை–8.
2. பட்டியல்.
3. இருப்புக் கோப்பு.

நிலச்சீர்திருத்த இயக்குநருக்காக